முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 768**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.11.2021, வெள்ளிக்கிழமை

1. சரவண சுடரேற்றி கலியுகத்தில்
சர்வ சக்தி அருள வந்த குருராஜனே
சரவண பிரியனே ஆறுமுக அரங்கனே
சற்குருவே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் பிலவ துலை திங்களில்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள், 05.11.2021 வெள்ளிக்கிழமை)
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
தானதர்ம பலம் பெருக்கி உலகினில்
தவவாழ்வு மக்களுக்கு கிடைக்க அருளுகின்ற
3. அருளுகின்ற சக்தியே ஆறுமுக அரங்கனே
அரங்கனே உந்தனுக்குள் யான் சூட்சுமமாய் இருக்க
வரமென உன்பால் வந்து வணங்கும் மக்களுக்கு
வடிவேலன் என் அருளும் துணையும் பரிபூரணமாய் உண்டு
4. உண்டு உண்டு ஓங்கார சக்தி பரவி
உலகோர்க்கு ஞான சித்தி உன் வழி உறுதியாகும்
கண்டுகண்டு உன் ஓங்காரக்குடிலை
கலியுகத்தின் காப்பென முழு சரணாகதி கொண்டவர்க்கு
5. கொண்டவர்க்கு கலியுகத்தில் பெரும்பேறு
குறையில்லாத ஞான வாழ்வு உறுதியாகும்
தொண்டு செய்து உன் தொண்டர்களாகி
தொடர்ந்து உன் வழி வரும் மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் கலியுகத்தில் பழுதில்லா தேறி
மரணமில்லா பெருவாழ்வு இனிதே காண
ஆறுமுகன் என் பரிபூரண ஆசி உண்டு
இதனாலும் அரங்கனுக்கு சக்தி யூட்டி
7. சக்தியூட்டி ஆறுமுகன் ஆற்றலாய் இருக்க
சரணடைந்து அரங்கன்பால் தீட்சை பெற்ற
மக்களுக்கு சக்தி கூடும் பிறவாபெரும்பேறு கிட்டும்
சாற்றிய ஆறுமுகன் என் ஞான அறிவுரை
ஆசி விளக்கம் முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் தலைமையில் உலகினில் ஞானிகள் ஆட்சி வர இருப்பதால் ஞானிகளின் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்புகின்றவர்கள் உயிர் கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு வாரம் ஒருவருக்கேனும் அன்னதானம் செய்து பசித்த ஏழைகளின் பசியாற்றுவித்து வருவதுடன் முருகப்பெருமானின் ஆசியை பெற **ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி** என்றோ **ஓம் சரவண ஜோதியே நமோ நம** எனும் மகா மந்திரத்தை முருகப்பெருமானை ஒரு தீபம் ஏற்றி வைத்து தினம் தினம் காலைமாலை நடுநிசி என சிறிது நேரம் பூஜைகள் செய்தும் வர வேண்டும்.

தயவுடன் செய்யும் அன்னதானமே ஞானம் சித்தி பெற பிரதானமாகும்.